## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு

## Uni5 பக்த விஜயம் - 53. ஸ்ரீபரிச பட்டர்

ஸ்ரீநாம தேவரின் காலத்தில் பண்டரீபுரத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சி இது. செல்வம் நிலையற்றது.அதை உழைப்பின் மூலம் தான் பெற முடியும்.தவறான வழியிலோ மாயமந்த்ர வித்தையாலோ பெறும் செல்வம் பல காலம் பயன் தராது. உண்மையான ஆன்மீக அன்பர்கள் அத்தகைய உழையாச் செல்வத்தை விரும்புதல் மூலம் ஜீவசக்தியை இழக்க நேரிடும்.

பண்டரீபுரத்தில் ஸ்ரீநாம தேவரின் தோழராக வாழ்ந்தவர் தான் ஸ்ரீஉமாநாத் பட்டர்.இவர் தன் தோழரின் ஸ்நேஹத்தால் ஆன்மீக வாழ்வில் பல பயிற்சிகள் மேற்கொள்பவர். குறிப்பாக ஸ்ரீதேவி மஹாலக்ஷ்மியை மிக ஆழ்ந்து உபாசனை மூர்த்தியாகக் கொண்டவர்.

பண்டரூபுரத்தில் தேவி ஸ்ரீரகுமாயி [ருக்மிணித் தாயார்] சன்னிதியில் இவர் பல கைங்கர்யங்கள் செய்வார்.ஆழ்ந்த உபாசனா மூல மந்த்ரம் ஜெபிப்பார்.இவருக்கும் மனைவிக்கும் லௌகீகப் பற்றுக்கள் அதிகம் இருந்தன.தன் உழைப்புக்குள் வரும் ஊதியத்தால் அவற்றைப் பெற அவர்களால் இயலவில்லை.ஆசைகள் அதிகம் ஆக ஆக மனம் அலைபாய்ந்தது.

சதா தன் செல்வத்தைத் தேடலை ருக்மிணி சன்னிதி முன் வைத்து கனகதாரா ஸ்தோத்ரம் செய்வார், ஸ்ரீமத் பாகவத்தில் குசேலரின் வைபவத்தைக் கொண்டாடிப் பாராயணம் செய்வார்.

இவரது பக்தியின் மந்த்ர பலனின் சக்தியால் இவருக்கு ஒரு சித்தர் மூலம் பரிசக்கல் [ரசவாதம் செய்யும் கல்] அளிக்கப் பட்டது அன்னையால். தினமும் தனக்குத் தேவையான பொருளை மட்டும் ரசவாதம் மூலம் அவர் எடுத்துக் கொண்டு வாழ்ந்தார்.மிகவும் ரஹசியமாகவும் தம்பதியினர் இதை மேற்கொண்டனர்.இக்கல் மூலம் மிக அதிகமான பொருளைப் பெற்றால் ஊரில் தேவையற்ற சந்தேகமும் எழுமே?! என்ன செய்வது?

**குடிசைக்குள் ரசவாதம்**

அளவாக ரசவாதம் செய்து வாழ்கிறார்கள் இவர்கள். இக்கட்டத்தில் ஒரு நாள் ஸ்ரீநாம தேவரின் மனைவியும் இவ்வம்மையாரும் பேசிக் கொண்டு இருக்கையில் எப்படியோ இக்கல்லைப் பற்றி நாம தேவரின் மனைவி தெரிந்து கொண்டு விடுகிறார்.சதா பாண்டுரங்கன் தன் வீட்டில் உலாவுகிறார்.கணவனோ எதையுமே

கேட்பதில்லையே! என்ன செய்ய? என்று உயர்ந்த பாவ பக்தியின் பலனை அறியாமல் அவர் மனம் தவிக்கிறது. எப்படியோ அக்கல்லை வாங்கிக் கொண்டு சில காலம் தான் பயன்படுத்துவதற்காகத் தன் குடிசைக்குள் மறைத்தார் நாம தேவரின் மனைவி.

சில நாட்களாகத் தன் குடிசையில் வளமை சஞ்சரிப்பதை உணர்ந்த நாம தேவர் உண்மையை உணர்கிறார்.அக்கல்லை எடுத்துச் சென்று ஆற்றில் வீசினார்.இதன் மூலம் தோழர்கள் இருவருக்கும் இடையில் மிகவும் மனக்கசப்பு ஏற்பட்டது.

ஊரைக் கூட்டி நாம தேவர் மீது தோழர் குற்றம் சாட்டினார்.
***"நண்பா! தேவையான அனைத்தையும் தருவது நம்முள் இருக்கும் தெய்வீக சக்தியின் அருள்.அது தானாக உன் பக்தியைக் கண்டு தன்னை வெளிப்படுத்தும்.அதற்காகத் தானே ஆன்மீக சாதனைகள்? ரசவாதம் மூலம் பெறும் பொருள் நிலை இல்லாதவை.அவற்றின் மூலம் நீண்ட காலம் பலன் இல்லை.மேலும் உழைப்பினால் இதைப் போல் குறுக்கு வழியில் கிடைக்கும் செல்வம் வ்யாதியாய் மாறும், பாவம் சேர்க்கும்.உன்னை அவற்றில் இருந்து மீட்கவே இவ்வாறு செய்யுமாறு அடியேனுள் பண்டரீநாதன் கூறினான்!"*** என்று கூறி ஆற்றில் மூழ்கி அபங்கம் பாடிக் கொண்டே பல ரசவாதக் கற்களை எடுத்து வர, பக்தியின் மேன்மையை உணர்ந்த பட்டர் அவற்றை வீசினார்.நாம தேவரை முழுமையாகச் சரண் புகுந்து மனதை தெய்வீகத் தங்கமாக மாற்றினார்.அதுவல்லோ உண்மையான ரசவாதம்?!

வெறும் உமாநாத்ஜி குரு பக்தி மூலம் தன்னையே மெய்யுணர்வில் லயிக்க வைத்த ரசவாதம் செய்தார்.அதனால் அவரை மக்கள் "**பரிச பட்டாச்சார்யா**" என்றனர்.

ஹரி ஓம்!